**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை :-திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை**

**இடைநிலை மனு எண்.235/2024**

**உள்**

**அசல் வழக்கு எண்.27/2021**

வசந்தா ... மனுதார் / 4 ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்படவேண்டிய நபர்

... எதிர் ...

1..வெண்ணிலா ... 1 ம் எதிர்மனுதார்/வாதி

1.சா.மகாராஜன்(இறப்பு)

2.சா.பவுர்

3.S.சரவணமுத்து .... 2, 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 11.09.2024 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 15.04.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/Pro 4 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.K.நாகராஜன், அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கோபாலன், அவர்கள் முன்னிலையாகியும், எதிருரை தாக்கல் செய்யாததால் அவர் தரப்பு முடித்து வைக்கப்பட்டும், 3 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்/2,3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், மனு

மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டு இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

## உத்தரவு

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் 4ம் உத்தேச பிரதிவாதியை அசல் வழக்கில் அவசியக் கட்சிக்காரர்களாக சேர்க்க உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்**:-

இம்மனுவில் மனுதாரர்/4ம் Pro பிரதிவாதி, அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட வேண்டிய நபர் ஆவார். மேற்படி பிரதான வழக்கினை தனது மகளான 1ம் எதிர்மனுதாரர்/வாதியானவர், தனது கணவரான 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் 3. 4 எதிர்மனுதாரர்கள் /2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாச் சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டதாகும். மேற்படி வழக்கில் தனது கணவர் உயிருடன் இருக்கும்வரை எதிர்வாதம் செய்து நடத்தி வந்தார். நான் வீட்டு வேலையாளாக வாழ்ந்து வந்ததால் மேற்படி வழக்கு பற்றிய விபரம் தனக்கு தெரியாத நிலையில் இருந்துவந்துள்ள நிலையில் தனது கணவரான 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி கடந்த 15-12-2023ம் தேதி அவரது மனைவியான தன்னையும், மகளான 1ம் எதிர்மனுதாரர்/ வாதியையும் சட்டப்படியான வாரீசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். தனது கணவருக்கு தங்களை தவிர வேறு எவரும் வாரிசுகள் இல்லை. அவரது பெற்றோர்கள் ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டனர். தங்களுக்கு 1ம் எதிர்மனுதாரர்/ வாதியை தவிர

வேறு எதுவும் குழந்தைகள் இல்லை.

(2.1 )இந்நிலையில் தனது உறவினர் வீட்டு விஷேசத்திற்காக கடந்த 03-06-2024 ம் தேதியன்று ரெட்டியபட்டி சென்றபோது மனுதாரரான தனது மகளான 1ம் எதிர்மனுதாரர்/வாதியான வெண்ணிலா எங்களது உறவினர்களிடம் மனுதாரரான தனது கணவர் மற்றும் மற்ற நபர்கள் மீது தாக்கல் செய்த வழக்கில் அவர்களுக்கு சாதகமாக உத்தரவு பெற இருப்பதாகவும், தாவாச் சொத்துக்கள் அவருக்கு மட்டும் தனித்து பாத்தியப்படப் போவதாகவும் பிரஸ்தாபித்து வந்ததாக மனுதாரரான தன்னிடம் தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து மனுதாரராகிய தான் ஒரு வழக்கறிஞர் மூலம் தனது கணவரான 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயர் மற்றும் இதன் 1ம் எதிர்மனுதாரர்/வாதி பெயர்களை குறிப்பிட்டு எழுதிக்கொடுத்து மேற்படி வழக்கு சம்மந்தமான விவரங்களை அறிய கோரியிருந்தேன். அதனை தொடர்ந்து தனது வழக்கறிஞர் மேற்படி விவரங்களை கொண்டு ஆன்லைன் மூலம் நீதிமன்ற நாட்குறிப்பு மற்றும் வழக்கு பற்றிய விவரங்களை அறிந்து தன்னிடம் தெரிவித்தார். அதன்பேரில் தனது மகளான இதன் 1ம் எதிர்மனுதாரர்/வாதியான வெண்ணிலா வழக்கில் ஒரு தரப்பினராக உள்ள 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியான தனது கணவரான மகாராஜனின் வாரிசு சம்மந்தமான விவரங்களையும் தற்போதுவரை தெரிவிக்கப்படவில்லை என்பதனை அறிந்தேன். அதனால் தனக்கு பெருத்த அதிர்ச்சியும், ஏமாற்றமும் ஏற்பட்டது.

(2.2) மேலும், தனது மகளான 1ம்எதிர்மனுதாரர் / வாதியான வெண்ணிலா

வேண்டுமென்றே இறந்துபோன மகாராஜாவின் மனைவியான தன்னை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் விட்டுவிட்டார். அதன்பின் எனது சார்பாக வழக்கில் ஆஜராவதற்காக தற்போது தனது வழக்கறிஞர் அவர்களிடம் வழக்கில் தானும் ஒரு தரப்பினராக ஆஜராவது பற்றிய விவரத்தினை கேட்டறிந்தேன். அதன்பேரில் தனது வழக்கறிஞரும் தனது மகளான 1ம் எதிர்மனுதாரர்/வாதியானவர் இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதியின் வாரீசு என்ற அடிப்படையில் தன்னை வழக்கில் தரப்பினராக சேர்க்காவிடிலும் தான் தரப்பினராக வழக்கில் சேரலாம் என்று தெரிவித்ததின் அடிப்படையில் இம்மனுவினை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் தானும் ஒரு அவசியமான மற்றும் முக்கியமான தரப்பினர் என்றும், வழக்குச் சொத்தில் தனது கணவரான 2ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமை உள்ளதோ, அதே உரிமை அவரது மனைவியான தனக்கு உள்ளதால் மேற்படி பிரதான வழக்கில் தன்னையும் ஒரு தரப்பினராக சேர்க்கவேண்டியது அவசியமாய் உள்ளது. இல்லாவிடில் தனக்கு பெருத்த கஷ்டம், நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, தாவா வழக்கில் இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மகாராஜாவின் மனைவியும் அவரது வாரிசுமான இம்மனுவின் மனுதாரர்/4ம் பிரதிவாதியாக சேர்க்கப்படவேண்டிய நபரான தன்னை தாவா வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க உத்தரவிடவேண்டி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 3ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி தரப்பு எதிருரை சுருக்கம்:**

இம்மனுவில் 3ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியாவார். இம்மனுவில் தன்னால்

ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தையும் இந்த மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இம்மனுவின் மனுதார் வீட்டு வேலையாளாக வாழ்ந்து வந்ததாகவும், அதனால் வழக்கு பற்றிய விபரம் அவருக்கு தெரியாததாகவும், மனுதார் கடந்த 03.06.2024 ம் தேதி ரெட்டியபட்டிக்கு சென்றபோது தான் வழக்கு பற்றிய விபரம் கேள்விப்பட்டு அதனை தொடர்ந்து ஒரு வழக்கறிஞர் மூலம் வழக்கை பற்றிய விபரம் தெரிந்து மேற்படி வழக்கில் 2ம் எதிர்மனுதார் /1ம் பிரதிவாதியின் வாரிசுகள் விபரங்கள் தற்போது வரை தெரிவிக்கவில்லை என்பதை அறிந்து கொண்டதாகவும், 1ம் எதிர்மனுதார்/வாதி வேண்டுமென்றே மனுதாரை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் விட்டுவிட்டதாகவம், வழக்குச் சொத்தில் 2ம் எதிர்மனுதார் /1ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமை உள்ளதோ, அதே உரிமை மனுதாருக்கு உள்ளதாகவும், அதனால் மனுதாரை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்பதாகவும், அதனால் எதிர்மனுதார்கள்/வாதி/ பிரதிவாதிகளுக்கு ஆட்சேபணை இருக்க முடியாது என்பதாகவும் இன்னும் பிறவாறாகவும் கூறியிருப்பதை இந்த 3ம் எதிர்மனுதார்/ 3ம் பிரதிவாதியால் மறுக்கப்பட்டு வன்மையாக ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரும், 2ம் எதிர்மனுதார்/பிரதிவாதியை எவ்வித காரணமும் இன்றி 40 ஆண்டுகளுக்கு மேலாக தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் தாவா சொத்திற்கும், வாதிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. 2, 3 எதிர்மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகளான தங்களுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தாகும். இந்நிலையில் மேற்படி மனுதார் மற்றும் வாதியின் கணவரான இரமேஷ் என்பவரின் தூண்டுதலின்பேரில் 2ம் எதிர்மனுதார் / 1ம் பிரதிவாதிக்கு தேவையில்லாத மன உளைச்சல், இடைஞ்சல், தொந்தரவு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தன்னையும் சேர்த்து மேற்படி வழக்கை வாதி

தாக்கல் செய்தனர். மேலும் மனுதார் எந்தவித காரணம் இல்லாமல் 40 ஆண்டுகளுக்கு மேலாக 2ம் எதிர்மனுதார் / 1ம் பிரதிவாதியை பிரிந்து வாழ்ந்து வந்ததால் மேற்படி மனுதார், 2ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கு சட்டப்படியாக வாரிசாக முடியாது என்பதால் மேற்படி மனுதாரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்ப்பது சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்புடையதல்ல. ஆகையால், மனுதாரரின் மனுவினை 3ம் எதிர்மனுதார்/ 3ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் அவர் தரப்பு முடித்து வைக்கப்பட்டுள்ளது. 3, 4 எதிர்மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இருதரப்பிலும் சாட்சியங்கள் தாக்கல் இல்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்? மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள நபரை அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து உத்தரவிட வேண்டியது அவசியமா? இல்லையா? என்பதே ஆகும்.

6) **<u>தீர்வு</u>:**

6.1) மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின் போது, அசல் வழக்கின் 1-ஆம் எதிர்மனுதாரர்/வாதியான வெண்ணிலா என்பவர் மனுதாரரின் மகள் என்றும், 1ம் பிரதிவாதியான மகாராஜன் என்பவர் மனுதாரரின் கணவர் என்றும், பிரதான

வழக்கினைக் கணவர் உயிருடன் இருக்கும் வரை அவரே நடத்தி வந்தார் என்றும், மனுதாரர் வீட்டு வேலை செய்து வந்ததாலும், கணவரைப் பிரிந்து வாழ்ந்து வந்ததாலும் வழக்கு விபரங்கள் தெரியவில்லை என்றும், இந்நிலையில், 1-ம் பிரதிவாதியான மகாராஜன் கடந்த 15.12.2023 அன்று இறந்துவிட்டார் என்றும், அவரது சட்டப்படியான வாரிசுகள் மனுதாரரும் 1-ம் எதிர்மனுதாரர்/ வாதி மட்டுமே என்றும், கடந்த 03.06.2024 அன்று உறவினர் வீட்டு விசேஷத்திற்குச் சென்றபோது, வாதியான வெண்ணிலா தனக்குச் சாதகமாக உத்தரவு பெற்று, தாவாச் சொத்துக்களைத் தனியாக அடையப் போவதாகப் பிரஸ்தாபித்ததை அறிந்து, வழக்கறிஞர் மூலம் ஆன்லைன் நாட்குறிப்பைச் சரிபார்த்ததில், தன் கணவர் இறந்த விபரத்தையோ, வாரிசு விபரங்களையோ வாதி நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்பதை அறிந்து அதிர்ச்சியுற்றார் என்றும், வாதி வேண்டுமென்றே தன்னைத் தவிர்க்கிறார் என்றும், தன் கணவருக்கு உள்ள அதே உரிமை தமக்கும் உள்ளதால், வழக்கில் முறையான தீர்வு காணத் தன்னை ஒரு அவசியத் தரப்பினராகச் சேர்க்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

6.2) மாறாக 3-ஆம் எதிர்மனுதாரர்/3-ஆம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின் போது, மனுதாரரின் கூற்றுக்களை வன்மையாக மறுத்து, மனுதாரரும், 1-ம் பிரதிவாதியான மகாராஜனும் எவ்விதக் காரணமும் இன்றி கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனித்தனியாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர் என்றும், தாவாச் சொத்தானது 2, 3 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், வாதியின் கணவர் ரமேஷ் என்பவரின் தூண்டுதலின் பேரில், 1-ம் பிரதிவாதிக்கு மன உளைச்சல் தரவே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. 40 வருடங்களாகக் கணவரைப் பிரிந்து வாழ்ந்ததால், மனுதாரர்

சட்டப்படியான வாரிசாக உரிமை கோர முடியாது என்றும், எனவே இம்மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

6.3) இம்மனுவானது மனுதாரர்/உத்தேச 4-ஆம் பிரதிவாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன்கீழ், அசல் வழக்கில் அவசியக் கட்சிக்காரர் என்ற முறையில் தன்னை 4-ஆம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன் படி, வழக்கின் முழுமையான தீர்வுக்கு ஒரு நபர் அவசியமான கட்சிக்காரர் அல்லது தகுந்த கட்சிக்காரர் என்று நீதிமன்றம் கருதினால், அவரை எந்த நிலையிலும் வழக்கில் சேர்க்க நீதிமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

6.4) இவ்வழக்கில் 1-ம் பிரதிவாதி மகாராஜன் 15.12.2023 அன்று இறந்துவிட்டார் என்பது இருதரப்பிலும் மறுக்கப்படாத உண்மையாகும். மேற்படி சங்கதிக்கு ஆதரவாக மனுதாரர் தரப்பிலும் மகாராஜன் என்பவரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அவரது மனைவி என்பதும், வாதி அவரது மகள் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மகாராஜன் என்பவரின் வாரிசு சான்றிதழ் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மதுரை அவர்களால் பல்வகை வழக்கு (எம்.சி) எண்.62/2010-ல் 15.10.2012 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு வாயிலாக இம்மனுவில் கண்ட மனுதாரரும், 1ம் பிரதிவாதியும் கணவன் மனைவி என்றும் 1ம் பிரதிவாதியை ஜீவனாம்ச தொகை செலுத்த உத்தரவிட்டுள்ள சங்கதிகளை அறிய

முடிகிறது. இதன்மூலம் இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956-ன் படி, ஒரு இந்து ஆண் வாரிசுதாரர்களை விட்டு இறக்கும்போது, அவரது முதல் நிலை வாரிசுகளாக மனைவியும் பிள்ளைகளும் சம உரிமை பெறுகின்றனர். 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பிலும் எவ்வித ஆட்சேபனைகளோ, எதிரிருரையோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

6.5) 3-ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில், மனுதாரர் 40 வருடங்களாகக் கணவரைப் பிரிந்து வாழ்ந்ததால் அவர் வாரிசாக முடியாது என வாதிடப்பட்டுள்ளது. ஆனால், சட்டப்படி தம்பதியினருக்கு இடையே விவாகரத்து பெற்றுத் திருமண பந்தம் முறிவடையாத வரை, வெறும் பிரிந்து வாழ்தல் மட்டுமே ஒரு மனைவியின் வாரிசுரிமையை அல்லது கணவரின் சொத்தின் மீதான சட்டப்படியான கோரிக்கையைப் பறித்துவிடாது. அசல் வழக்கானது வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சொத்தின் உரிமை மற்றும் சுவாதீனம் குறித்து முழுமையாகத் தீர்மானிக்க, 1-ம் பிரதிவாதியின் வாரிசான உத்தேச மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார். எனவே உத்தேச மனுதாரரை பிரதிவாதியாகச் சேர்ப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது. அவ்வாறு சேர்க்காவிடில், மனுதாரரின் உரிமை பாதிக்கப்பட்டு, தரப்பினர்களுக்கிடையே பல வழக்குகள் உருவாக வாய்ப்புக்கள் ஏற்படும். எனவே, மனுதாரர் இந்த வழக்கிற்கு ஒரு தகுந்த மற்றும் அவசியமான தரப்பினர் என்றும், 3-ம் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகளான சொத்துரிமை குறித்த இதர விபரங்களைப் பிரதான வழக்கின் விசாரணையின்போதுதான் சாட்சியங்கள் மூலம் முடிவு செய்ய முடியும் என்பதாலும், இந்த ஆரம்பக் கட்ட மனுவில் அதைத் தீர்மானிக்க இயலாது என்பதாலும்

மேற்படி வாதங்கள் ஏற்புடையதல்ல என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. உத்தேச மனுதாரரை 4ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் சேர்க்க உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 10 நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M.,
Date: 2026.06.10 12:18:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

**நத்தம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 15.10.2012 | மதுரை, மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்ற பல்வகை வழக்கு (எம்.சி.) எண். 62/2010 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு - நகல் |
| ம.சா.ஆ.2 | 15.12.2023 | 1ம் பிரதிவாதி மகாராஜன் என்பவரது இறப்பு சான்றிதழ் - இணையதள நகல் |
| ம.சா.ஆ.3 | 06.01.2025 | மகாராஜன் என்பவரது வாரிசு சான்றிதழ் - இணையதள நகல் |

**<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :-இல்லை.

Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M.,
Date: 2026.06.10 12:18:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

**நத்தம்.**